Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 94 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | ஜனவரி 07, 2021

## கொழும்பிலிருந்து தப்பி ஓடிவந்த
# பூநகரியைச் சேர்ந்த 7 பேர் உட்பட 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

வடக்கு மாகாணத்தில் இன்று 11 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் இருவர் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள், 7 பேர் பூநகரியைச் சேர்ந்தவர்கள் மற்றும் இரண்டு பேர் மருதங்கேணியைச் சேர்ந்தவர்கள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

03

## பரம்பரைச் சொத்துக்களைப் பாதுகாக்க எங்களைப் பகடைக் காய்களாக்கவேண்டாம்




தங்கள் பரம்பரைச் சொத்துக்களை காப்பாற்றிக்கொள்ளவோ அல்லது சொத்துக்களை சேர்த்துக்கொள்ளவோ தமிழ் மக்களை பகடைக் காய்களாக மாற்றவேண்டாமென கோரிக்கை விடுத்துள்ளார் தமிழீழ விடுதலை இயக்க முக்கியஸ்தரும் வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான விந்தன் கனகரட்ணம். 03

## யாழ்.பல்கலை. மருத்துவ பீட மாணவனுக்கு கோரோனா தொற்று
### யாழ்.மாநகரில் உணவகம் மூடல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று

03

## ஜேர்மனி 1019 பிரித்தானியா 1041
### ஒரே நாளில் கொரோனா பலியெடுப்பு

யேர்மனியிலும் கொரோனா தொற்று நோய்க்கு 1019 பேர் நேற்றுப் புதன்கிழமை உயிரிழந்துள்ளனர். அத்துடன் 26,651 பேருக்கு புதிதாக தொற்று ஏற்பட்டுள்ளது. 03

## தொண்டைமானாற்று கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் கைது

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் மூவர் இலங்கை கடற்படையினரால் இன்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். 03

## வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இருவர் 170 கிலோ கஞ்சாவுடன் காங்கேசன்துறையில் கைது



காங்கேசன்துறைக் கடற்பரப்பில் சுமார் 170 கிலோ கஞ்சாவுடன்இருவர்கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

03

## கொரோனாவைச் காரணம் காட்டி
# அறைகளுக்குள் முடங்கவேண்டாம்
### அமைச்சர்களுக்கு ஜனாதிபதி கோத்தா உத்தரவு



கொரோனா பரவலை காரணமாக கூறிக்கொண்டு மூடிய அறைக்குள் முடங்கி கிடக்காமல் கிராமங்களுக்கு சென்று மக்களுடைய பிரச்சினைகளை பாருங்கள் என அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

"கிராமத்துடன் பேச்சு" என்ற வேலைத்திட்டம் தொடர்பாக அலரி மாளிகையில் இன்று அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளை சந்தித்த ஜனாதிபதி இந்த உத்தரவை வழங்கியிருக்கின்றார். 03

## பெல்ஜியத்திலிருந்து வந்த பொதியில் 13.5 கோடி பெறுதியான
## 18 ஆயிரம் போதை மாத்திரைகள் சுங்க அதிகாரிகளிடம் சிக்கின

பெல்ஜியம் நாட்டில் இருந்து இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட 9 கிலோ நிறையுடைய 18,000 போதை மாத்திரைகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தென் ஆசியாவிலேயே இதுவரையில் கைப்பற்றப்பட்ட பாரிய அளவான போதை மாத்திரை தொகை இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த போதை மாத்திரைகள் 13.5 கோடி ரூபாய பெறுமதியுடையவை என தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய தபால் பரிமாற்றத்திற்கு கிடைக்கப்பெற்ற பொதி ஒன்று

03

## உதயன் பத்திரிகைக்கு எதிரான வழக்கு: அழைப்புக் கட்டளை ஒப்படைப்பு

'உதயன்' பத்திரிகைக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அழைப்புக் கட்டளை பொலிஸாரால் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

03

## ஒற்றுமைப்பட்டு எமது உறவுகளைச் சிறைமீட்க உதவுங்கள் சர்வதமத் தலைவர்களிடம் கண்ணீர் மல்க வேண்டுகோள்

கொரோனா தொற்றால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் இத்தருணத்திலாவது விடுதலை செய்ய வேண்டும் என கைதிகளின் உறவினர்கள் சர்வமத தலைவர்கள்



03




தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# மன்னாரில் ஒரே குடும்பத்தவர்கள் ஐவருக்கு தொற்று 46 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த கிராமத்தில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 179 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) மாலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலினைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர், "யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையின்போது மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து செயற்பட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து சுகாதார அதிகாரிகளும் எருக்கலம்பிட்டி கிராமத்திற்கு விஜயம் செய்து குறித்த கிராமத்தை சுய தனிமைப் படுத்தி மாலை 4.30 மணி வரை 200 பீ.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

குறித்த பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் இரண்டு தினங்களில் கிடைக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. அதனை தொடர்ந்தே மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

மேலும் எருக்கலம்பிட்டி கிராமத்தில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 179 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பீ.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார்.

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல்



### மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னான ஓமோன் பிரதியீடு

மாதவிடாய் நிறுத்தத்தின் பின் ஏற்படும் அறிகுறிகளுக்கான தீர்விற்கான மருத்துவ பரிகாரமுறை பல அணுகு முறையை கொண்டது. அவற்றில் ஒன்று ஓமோன் பிரதியீட்டு முறையாகும். அனைத்து மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்ட பெண்களிலும் ஈஸ்ரோஜன் ஓமோன் குறைவு ஏற்பட்டாலும் அறிகுறிகளின் தீவிரத்தன்மை ஒவ்வொருவரிலும் வேறுபடலாம். இந்த ஓமோன் பிரதியீடானது வாய்வழியாக, தோலின் ஊடாக அகத்துறிஞ்ச கூடிய ஒட்டும் பட்டை, யோனி வழி மூலம், தோலின் கீழ் வைக்கப்படும் உட்செருகி மூலம், கருப்பைக்குள் செலுத்தும் சாதனம் மூலமும் வழங்கப்படலாம்.

மார்பக, கருப்பை புற்று நோயுடையோர், காரணமறியா யோனி வழி இரத்தபோக்கு உள்ளோர், ஈரல் நோய் உள்ளோர், குருதி உறைவு தொடர்பான நோயுடையோர் ஓமோன் பிரதியீடு எடுப்பது உகந்ததல்ல.

**வைத்தியகலாநிதி கோ.றஜீ வ்**

## கொரோனாவால் சாவோரை எரிக்கவே பரிந்துரை



கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை தகனம் செய்ய வேண்டும் என நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதா அல்லது தகனம் செய்வதா என்பது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த அறிக்கை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

அதற்கு பதிலளித்து உரையாற்றும் போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தப் பரிந்துரையானது, எந்தவொரு மத அல்லது ஏனைய காரணங்களுக்காக மாற்றப்படாமல் செயற்படுத்தப்படும் எனவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், அந்த அறிக்கை பிரதான குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

# ஐ.நா.விவகாரம் தமிழ்த் தேசிய அணிகள் இணக்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று தமிழ்க் கட்சிகளும் இணைந்து ஐ.நாவின் புதிய பிரேரணைக்கான முன்மொழிவு வரைபை தயாரிப்பது குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.


கொழும்பில் நேற்று(புதன்கிழமை) மாலை நடைபெற்ற சந்திப்பிலேயே இதுகுறித்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

முன்மொழிவு வரைபைத் தயாரிக்க மூவர் அடங்கிய குழுவும் இதன்போது நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் அதன் முக்கியஸ்தர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பாக்கியசோதி சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற குறித்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கொரோனாவால் உயிரிழப்போரை தகனம் செய்வது குறித்து வெளியான வர்த்தமானி சட்டவிரோதமானது



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரை தகனம் செய்யவேண்டுமென வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானது. ஆகையால், அதை இரத்துச் செய்யவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று(புதன்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதா அல்லது புதைப்பதா என்கிற பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே, இதை அரசியல் ரீதியாக அணுகாது, நிபுணர்கள் குழுவின் அறிக்கையின்படி இதைக் கையாள வேண்டுமென ஜனாதிபதி, பிரதமர் தீர்மானித்திருந்தனர்.

கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வழிகாட்டல்களை நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது. இதனை ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி ஆகியோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். சிங்கள மக்களும் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தில் அடக்கம் செய்ய முடியுமென தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்டாது, கொரோனா வைரஸால் உயிரிழப்போரை எரிக்க வேண்டுமென வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தமையானது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஏமாற்றியா என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் சட்டத்துக்கும், நாடாளுமன்ற கலாசாரத்துக்கும் எதிரானது என்பதால், அதனை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# அரசியல் அழுத்தத்தால் சுகாதார நடைமுறைகளை செயற்படுத்த முடியவில்லை - வைத்திய அதிகாரி!

சுகாதார நடைமுறைகளை செயற்படுத்த அரசியல் அழுத்தங்கள் தடையாகவுள்ளன என தென்.காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி குற்றச்சாட்டியுள்ளார்.

சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை செயற்படுத்தும் போது சில உயர்மட்ட அரசியல் அழுத்தங்கள் காரணமாக தமக்கு இடர்பாடுகள் காணப்படுவதாக காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி யதுநந்தன் குற்றஞ்சாட்டினார்.

இன்று யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கொரோனா தடுப்பு விசேட செயலணி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் குறிப்பாக காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட ஆலயங்களில் சுகாதார அமைச்சின் வழிகாட்டல் கமைய 50 பேர் மட்டுமே ஆலய உற்சவங்களில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது

எனவே அதனை நாம் செயற்படுத்து கின்றோம் அவ்வாறு செயற்படுத்தும் போது ஒரு சில நபர்கள் தமது உயர்மட்ட அரசியல் அழுத்தங்களை பாவிப்பதாகவும் அதனால் நமக்கு இடையூறு ஏற்படுவதாகவும் இது தொடர்பில் ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அத்தோடு தொடர்ச்சியாக அநாமதேய தொலைபேசிகள் ஊடாக மிரட்டப்படுவதாக தெரிவித்ததோடு இந்த விடயம் தொடர்பில் பொலிசார் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்

# கொரோனோ மரணம் 219 ஆக உயர்வு

கொரோனா தொற்றுக்கு உள்ளான மேலும் இரு மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 219 ஆக அதிகரித்துள்ளது.

தெஹிவளையைச் சேர்ந்த 60 வயதான ஆண் ஒருவர் கொரோனா தொற்றினால் நேற்று உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதன் பின்னர் தேசிய தொற்றுநோய் தடுப்பு பிரிவிற்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

சிறுநீரக பாதிப்பு மற்றும் கொரோனாவால் ஏற்பட்ட நிமோனியா காரணமாக இவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, அலவ்வ பகுதியைச் சேர்ந்த 78 வயதான பெண்ணொருவரும் கொரோனா தொற்றினால் நேற்று உயிரிழந்துள்ளார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கொரோனா நோயாளராக அடையாளம் காணப்பட்ட பின்னர், நாரம்மல மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

சுவாசத் தொகுதியில் ஏற்பட்ட பாதிப்பு, நீரிழிவு நோய் மற்றும் கொரோனா தொற்று காரணமாக இவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 522 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 46 ஆயிரத்து 248 ஆக அதிகரித்துள்ளது.

# குளத்துக்கு நீராடச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

திருகோணமலை - செல்வநாயகபுரம் பகுதியில் குளத்துக்கு நீராடச் சென்ற இளைஞர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (06) மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அன்புவெளிபுரம்-சஹாயமாதா வீதியில் வசித்துவரும் ரவீந்திர குமார் ஜேனுஷன் (16 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அன்புவளிபுரம் பிரதேசத்திலுள்ள (பாம்குளம்) என்று அழைக்கப்படும் குளத்துக்கு வழமைபோன்று நண்பர்களுடன் பொழுதுபோக்கை கழிக்கச் சென்றவர்களை நண்பர்கள் மூன்று பேரும் குளித்ததாகவும், சக நண்பர் ஒருவருடைய செருப்பை குளத்துக்குள் விளையாட்டுக்காக வீசியபோது அதனை எடுத்துச் சென்றவர் நீரில் மூழ்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து குறித்த இளைஞன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மரணம் தொடர்பில் விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பெல்ஜியத்திலிருந்து...

தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் குறித்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது வளர்ப்பு பிராணிகளுக்கான தீவன பொதியில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 18 ஆயிரம் போதை மாத்திரைகள் சுங்க பிரிவினரால் மீட்கப்பட்டிருக்கின்றது.

குறித்த போதை மாத்திரைகள் பெல்ஜியத்திலிருந்து வளர்ப்பு பிராணிகளுக்கான தீவன பொதிகளில் அடைக்கப்பட்டு இலங்கைக்குள் கொண்டுபரப்பட்டிருக்கின்றது. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகிறது.

## உதயன்...

யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக எதிர்வரும் 19ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் ஒளிப்படம் மற்றும் சொற்களைப் பிரசுரித்தமைக்காக யாழ்ப்பாணம் பொலிஸாரால் உதயன் பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு இல.23 நீதிமன்றக் கட்டளைச் சட்டத்தின் 55(1) பிரிவின் கீழும் இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழும் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட அமைப்பை புத்துயிர் பெறும் வகையில் செயற்பட்டமை, மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தி மீண்டும் போர் நடவடிக்கைகள் ஏற்படக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியமை என்பன குற்றச்சாட்டுக்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி முன்னைய ஆண்டுகளைப் போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் படத்துடன் கூடிய செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தி தொடர்பாகவே யாழ்ப்பாணம் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உதயன் பத்திரிகை மீதான வழக்குத் தாக்கல் செய்த பொலிஸாரின் நடவடிக்கை ஊடகத்துக்கு எதிரான அடக்குமுறை என்று அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பல தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவை...

இதன்போது மேலும் அவர் கூறுகையில், கொரோனா பரவலை காரணம் காட்டிக் கொண்டு மூடிய அறைக்குள் முடங்கியிருப்பதால் எந்தவொரு பயனும் இல்லை.

அறைகளில் இருந்து வெளியேவந்து மக்களை சந்தித்து மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வையுங்கள் என பணிப்புரை வழங்கியிருக்கின்றார்.

## யாழ். பல்கலை...

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் வீடொன்றில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவருக்கே இவ்வாறு தொற்று உள்ளமை இன்று மாலை இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாத்தளையைச் சேர்ந்த மாணவன், வீட்டுக்குச் சென்று உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்குக்கும் சென்று வந்துள்ளார்.

தப்புள்ளயிலிருந்து கடந்த 26ஆம் திகதி பேருந்தில் அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார் என்று சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

மாணவனின் தாயாருக்கு கோரோனா தொற்று உள்ளது என இன்று வியாழக்கிழமை கண்டறியப்பட்ட நிலையில் மாணவனிடமும் இன்று மாதிரிகள் பெறப்பட்டன. அவரது மாதிரிகள் உடனடியாக பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்திய போது கோரோனா வைரஸ் தோற்றுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அவர் உணவு வாங்கச் சென்ற ஆனைப்பந்தி உணவகம் சுகாதாரத் துறையினரால் மூடப்பட்டு அங்கு பணியாற்றுபவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## கொழும்பிலிருந்து...

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களில் இன்று இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையிலேயே அவர்கள் 11 பேரும் அடையாளம் காணப்பட்டனர்.

பூநகரியைச் சேர்ந்த 11 பேர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளனர். அவர்களிடம் அந்த விடுதியில் வைத்து மாதிரிகள் பெறப்பட்டன. அதனால் அவர்கள் அங்கிருந்து தப்பித்து பூநகரிக்கு திரும்பி வந்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் தப்பி வந்தமை தொடர்பில் கொழும்பிலிருந்து வடமாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. அத்தோடு மூவருக்கு தொற்று உள்ளமை தொடர்பிலும் கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டது.

கோரோனா வைரஸ் தொற்று உள்ள மூவரையும் கோவிட் -19 சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைத்த அதிகாரிகள் ஏனைய 8 பேரையும் சுயதனிமைப் படுத்தியிருந்தனர்.

அவர்கள் 8 பேரின் மாதிரிகள் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டது. 7 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மருதங்கேணியில் கொழும்பு சென்று திரும்பிய இருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடைய சங்கானையைச் சேர்ந்த ஒருவருக்கும் உடுவிலைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இன்று 248 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

இன்று அதிகாலை கடற்படையினர் முன்னெடுத்த சுற்றுக்காவல் நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்க இடமான படகொன்றை வழிமறித்த கடற்படையினர், படகைச் சோதனையிட்டுள்ளனர். படலிருந்து கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

படகில் இருந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## தொண்டைமானாற்று...

யாழ்ப்பாணம் வடமராட்சியின் தொண்டமானாறு கடற்பரப்பில் ஒரு படகில் மூவரும் கரைக்கு நெருக்கமான பகுதியில் மீன்பிடி நடவடிக்யையில் ஈடுபட்டிருந்தபோதே கைதாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படைமுகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை,

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 26 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட பிசிஆர் பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்றும் எதிர்வரும் 11ஆம் திகதி மீண்டும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மீண்டும் தொற்று இல்லை என்றால் 13 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜேர்மனி...

இதனிடையே பிரித்தானியாவில் உருமாறிய வீரியமிக்க கொரோனா தொற்று நோயினால் ஒரு நாளில் நேற்றுப் புதன்கிழமை மட்டும் 1041 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 62,322 பேர் தொற்று நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

இங்கிலாந்து மருத்துவமனைகளில் 30,074 கோவிட் நோயாளிகள் உள்ளனர். தொற்று நோயாளிகள் எண்ணிக்கை கடந்த வாரத்தை ஒப்பிடுகையில் 37 சதவீதம் அதிகரித்துள்ளது. மருத்துவமனைக்கு நோயாளிகளை அழைத்து வர முடியாமல் ஆம்புலன்ஸ் சேவை திணறி வருகின்றது.

அடுத்த சில வாரங்களுக்கு இறப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கக்கூடும் எதிர்பாக்கப்படுகின்றது.

## பரம்பரைச் சொத்துகளை...

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் தமிழ் தலைவர்கள் ஒற்றுமையாக தீர்மானமொன்றை எடுத்து ஜநாவிற்கு கொண்டு செல்ல வேண்டிய சந்தரப்பமிது.

ஆனாலும் பெரும்பான்மை மத்தியஸ்தத்தில் தமிழ் தலைமைகள் பேச்சு மேசையில் அமர்வது மிக கேவலமானது.

அதுவும் கடந்த ஆறு வருடங்கள் ஜநாவில் இலங்கைக்கு கால அவகாசம் பெற்றுத்தந்தவர்கள் தலைமையில் தமிழ் தலைவர்கள் ஒன்று கூடி கொழும்பில் ஆராய்கிறார்களாம்.

நிமல்கா பெர்னான்டோ மற்றும் பாக்கிய சோதி சரவணமுத்து போன்றவர்கள் ஜநாவில் என்ன செய்தார்கள் என்பது தமிழ் மக்களிற்கு நன்கு தெரியும்.

ஆளாளுக்கு தமிழ் தரப்புகள் தனித்தனியாக ஜநா விடயத்தை கையாள்வது நிச்சயம் தமிழ் மக்களது அவலங்களை கூறுபோடும் நடவடிக்கையாகும்.

அது எமது கோரிக்கையினை மலினப்படுத்துகின்றது.

காணாமல் போனோர் விடயத்திற்கு தீர்வில்லை. அரசியல் கைதிகள் சிறைகளிலேயே அடக்கப்பட்டுள்ளனர். சிங்கள குடியேற்றங்கள்,விகாரைகள் அமைப்பு,பௌத்த மயமாக்கல் என தமிழ் தேசம் மோசமான கட்டத்தை அடைந்து வருகின்றது.

இந்நிலையில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எனப்படுவோர் தங்கள் கோடி கோடியாக உள்ள சொத்துக்களை காப்பாற்றிக்கொள்ளவோ அல்லது சொத்துக்களை சேர்த்துக்கொள்ளவோ தமிழ் மக்களை பகடைக்காய்களாக மாற்ற சதிகளில் ஈடுபடக்கூடாது.அதே போன்றே இலங்கையினை ஜநாவிலிருந்து வெளியேற்றி பாதுகாக்கவும் மக்களை ஏமாற்றிய முயலக்கூடாது.

அதிலும் ஆளாளுக்கு தனித்து பிரிந்து அறிக்கைகள் விடுவதும் தயாரிப்பதும் மோசமானதெனவும் தெரிவித்தார்.

## ஒற்றுமைப்பட்டு...

முன்னிலையில் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சர்வமத கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம் எனும் தொனிப் பொருளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால், இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறை இருட்டில் இருக்கும் எமது உறவுகளை தற்கால கொரோனா வைரஸ் தொற்றும் வெகுவாக பாதித்துவரும் நிலையில் கருணை அடிப்படையில் மனிதாபினமாக இத் தருணத்திலாவது அவர்களை விடுவிக்க வேண்டுமெனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தில் உள்ள சர்வமத பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் சிறையிலுள்ள எமது உறவுகளை விடுவிக்க மதத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கண்ணீர் மல்க உறவுகள் கோரிக்கை விடுத்தனர். அத்தோடு கொரோனாவால் ஆபத்தை எதிர் நோக்கியுள்ள உறவுகளை மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கமும் விடுவிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தபட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

# அரசியல் கைதிகளின் உறவினர்கள் சுரேன் எம்.பியுடன் சந்திப்பு





அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு இலங்கையின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் உறவினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு இன்று (07) முற்பகல் கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு இலங்கையின் சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள் அவர்கள் பிரதிநிதிகள் கலாநிதி சுரேன் ராகவனைச் சந்திப்பதற்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவே இச்சந்திப்பு இடப்பெற்றதுடன், சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் பிரதிநிதிகள், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் திணைக்களத்தின் சட்டப்பிரிவின் பிரதானியும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோகண அவர்களும், சிறைக் கைதிகளின் உரிமைகள் தொடர்பான சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சேனக உள்ளிட்டோரும் கலாநிதி சுரேன் ராகவனுடன் இந்தக் கலந்துரையாடலில் இணைந்திருந்தனர்.

இலங்கையில் நீறுபூத்த நெருப்பாக எரிந்து கொண்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வொன்றினை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்ற அரசியலுக்கும் அப்பாற்பட்ட கரிசனையின் காரணமாகவே தாம் இந்த விடயம் தொடர்பில் முன்வந்ததாக கலாநிதி சுரேன் ராகவன் குறிப்பிட்டதுடன், இது தொடர்பில் கௌரவ நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களுடன் இன்று காலைகூட பாராளுமன்ற கேள்வி பதில் நேரத்தில் ஆராய்ந்ததாகவும் தெரிவித்தார். இதன்போது அமைச்சரும் அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் உள்ளோரினை விடுவிப்பதற்கான கொள்கையொன்றை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாக கலாநிதி சுரேன் ராகவன் சுட்டிக் காட்டினார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 236 பேர் இலங்கையின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் 107 பேர் விடுதலைப் புலிகள் என்ற சந்தேத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் தரப்பில் இதன் போது தெரிவிக்கப்பட்டது. அத்துடன் சிறைச்சாலைகளுக்குள் அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுக்கும் பொறுப்பு அமைச்சுக்கு உள்ளதென குறிப்பிட்ட பணிப்பாளர், உறவினர்கள் எவராவது பாதிப்பட்டிருந்தால் அதுதொடர்பான தகவல்களை வழங்கும்படியும் உறவினர்களிடம் கோரியிருந்தார்.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெறுபவர்கள், வழக்குத் தாக்கல் மேற்கொண்டு நீதிமன்றங்களில் வழக்கு இடம்பெற்றுவரும் நிலையில் சிறைகளில் உள்ளோர் மற்றும் இதுவரையும் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்படாது சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரென மூன்று வகையாக இவர்களை வகைப்படுத்த முடியுமென இதன்போது குறிப்பிட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸ் திணைக்கள விசாரணைகள் தாமதமாகி ஏதேனும் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அதுதொடர்பான தகவலை தெரியப்படுத்தினால் அவற்றின் விசாரணைகளை விரைவில் முன்னெடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு வழிவகைகளை மேற்கொள்வதற்கு தாம் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் 88/89 காலப்பகுதிக்கு பின்னர் இவ்வாறானதொரு நிலையினை எதிர்நோக்கியிருந்ததுடன் அப்போதைய அரசாங்கம் பொதுவான கொள்கையொன்றின் அடிப்படையில் அவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டதனை சுட்டிக்காட்டிய சிறைக் கைதிகளின் உரிமைகள் தொடர்பான சங்கத்தின் தலைவர், அதேபோலொரு பொதுவான கொள்கையினை தற்போதை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்றும் அதற்கு கல்விமானான கலாநிதி சுரேன் ராகவன் அவர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கையினை முன்வைக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

நீதி மன்ற வழக்கு நிறைவடைந்து தண்டனைகளுடன் சிறைகளில் உள்ளோர், வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்போர் மற்றும் இன்னும் வழக்கோ குற்றச்சாட்டோ எதுவும் தாக்கல் செய்யப்படாது சந்தேகத்தின் அடிப்படையில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரென வகைப்படுத்தி அவர்களின் விபரங்களை தனினிதனியாக கையாள்வதற்கும் இது தொடர்பில் அரசாங்க தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவூட்டுவதற்கும் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரை சந்தித்து கலந்துரையாடுவதற்கும் எதிர்பார்ப்பதாகவும் கலாநிதி சுரேன் ராகவன் குறிப்பிட்டார்.

# விளையாட்டு போட்டிகளை நடத்த தீர்மானம்



புதிய சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சருக்கும் இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வைரஸ் தொற்று அபாயம் அதிகமுள்ள மேல் மாகாணம் தவிர ஏனைய மாகாணங்களில் விளையாட்டுப்போட்டிகளை ஆரம்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ளவர்களை எக்காரணம் கொண்டும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்க வேண்டாம் என்றும் இந்த கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தகைய அபாயமுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிள்ளைகள் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதனால் வைரஸ் பரவல் ஏற்பட முடியும் என்றும் இங்கு மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மெய்வல்லுனர் போட்டிகள், குழு விளையாட்டுக்கள், பாடசாலை பிக்மெச் போட்டி போன்றவற்றை நடத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் நோய் அறிகுறிகளுடைய மற்றும் நோய்வாய்ப்பட்டுள்ள எந்தவொரு பிள்ளைகளையும் விளையாட்டுப் போட்டிகளுக்கு உட்படுத்தக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் தேவைக்கேற்ப முழுமைப்படுத்தப்பட்டு முறையாக பாடசாலை விளையாட்டுப் போட்டி ஆரம்பிப்பதிலுள்ள முக்கியத்துவம் குறித்தும் இதன்போது சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# பிசிஆர் பரிசோதனைகள் வடக்குக்கு போதுமானவை



தற்போதைய நிலையில் பிசிஆர் பரிசோதனை வடக்கு மாகாணத்திற்கு போதுமானது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைமையில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில்ல் ஒரு நாளைக்கு 600 க்கும் மேற்பட்டவர்களுக்கு பிசிஆர்பரிசோதனை மேற் கொள்ளக் கூடியதாகவுள்ளது எனவே தற்போதைய நிலையில் நிலையில் எமக்கு அண்டிஜன் பரிசோதனை தற்போதைய நிலைமையில் தேவையற்ற ஒன்று என தெரிவித்தார்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற யாழ் மாவட்ட கொரோனா தடுப்பு விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

குறிப்பாக ஏனைய மாகாணங்களில் குறித்த அண்டிஜன் பரிசோதனை மேற் கொள்ளப்படுகின்றது ஏனெனில் அந்த மாகாணங்களில் எமது மாகாணத்தை போல பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதன் காரணமாக அவர்கள் மேற்கொள்கின்றார்கள்

அத்துடன் அண்டிஜன் பரிசோதனையில் ஒரு சில நம்பிக்கையில்லா தன்மையும் காணப்படுகின்றது அண்டிஜன் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று என காண்பிக்குமாயின் அவருக்கு பிசிஆர் பரிசோதனை செய்யும் போது அவருக்கு தொற்று இல்லை என காண்பிக்கும்.

அதே போல் அண்டிஜன் சோதனையின் போது ஒருவருக்கு தொட்டு இல்லை என உறுதிப்படுத்தியவரை பிஸிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது அவருக்கு பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படும்

எனவே அண்டிஜன் பரிசோதனை என்பது மிகவும் நம்பகரமான சோதனை முறை அல்ல மேலும் வடக்கு மாகாணத்தில் போதியளவு பிசிஆர் பரிசோதனை மேற் கொள்ளக் கூடியதாக இருப்பதன் காரணமாக நாம் தற்போது அதைப் பற்றி பரிசீலிக்க தேவையில்லை

அத்தோடு வெளிமாவட்டங்களில் இருந்து ஆனையிறவு மற்றும் பூநகரிப் பாதை ஊடாக வருவோருக்கு நாம் அதிகாலை வேளைகளில் பிசிஆர் சோதனைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்

யாழ் மாவட்டத்தில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளோர் தொற்றாளர்களுடன் நேரடி தொடர்பில் இருந்தோருக்கு நாம் ஒவ்வொரு நாளும் பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.